SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

# தமிழ்

நவம்பர் - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Also available @ BOOKMARK


Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# நவம்பர் - 2018

## தமிழ்நாடு

1) சென்னை மாநகராட்சியானது பெரம்பூரில் இரண்டு புதிய 'உயிரி மீத்தேனாக்கத் தொழில்நுட்ப முறை' மூலம் எரிவாயு தயாரிக்கும் நிலையங்களை **(biomethanation plants)** தொடங்கியுள்ளது. இவை நாளொன்றுக்கு 15 LPG வாயு உருளைகளில் அடைக்கப்படும் அளவுக்கு ஏற்ற மீத்தேன் வாயு வினையும் 80 - 100 கி.கி. அளவிலான இயற்கை உரத்தினையும் உற்பத்தி செய்ய வல்லவை.

2) 2018 நவம்பர் 19 அன்று எண்ணூ ரில் உள்ள காமராஜர் துறைமுகத்தில் MT கோரல் ஸ்டோர்ஸ் என்னும் எண்ணெய் கப்பலிலிருந்து (MT Coral Stars Oil Ship) எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு 2 டன்கள் அளவுள்ள எண்ணெயானது கடலில் கலந்து கடல் நீர் மாசுபாடு அடைந்தது. இந்த எண்ணெய் மாசுபாட்டை தூய்மைப்படுத்த **'சமுத்திர பகீரதர்'** (Samudra Paheradar) என்னும் கப்பலானது பயன்படுத்தப்பட்டது.

3) இரயில்வே பாதுகாப்புப் படையினரால் (RPF) உருவாக்கப்பட்ட நாய் இறைச்சி தொடர்பான விவகாரத்தில் உண்மைத் தன்மையினைக் கண்டறியும் சோதனையில் மெட்ராஸ் கால்நடை மருத்துவக் கல்லூரியின் 'இறைச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது' **DNA கலப்பினச் சேர்க்கை முறையைப்** (DNA Hybridization) பின்பற்றியுள்ளது.

4) இரயில்வே பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 'GRP Help App' என்னும் செயலியானது எழும்பூர் இரயில் நிலையத்தில் இரயில்வே காவல்துறையினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

5) இந்தியா டுடே நிறுவனத்தால் வழங்கப்படும் 2018-ம் ஆண்டுக்கான சிறந்த மாநிலத்துக்கான விருதுகளில் (NUMERO UNO STATE) **நான்கு விருதுகள் தமிழ்நாட்டிற்கு** வழங்கப்பட்டுள்ளன. இவ்விருது வழங்கும் விழாவானது புது தில்லியில் நடைபெற்றது.

- ❖ இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களுள் அனைத்துத் துறைகளிலும் சிறப்பாகச் செயல்பட்டதற்கான விருது
- ❖ சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பராமரிப்பதில் சிறந்து விளங்கும் மாநிலத்துக்கான விருது
- ❖ சுற்றுலாத்துறையில் சிறந்து விளங்கும் மாநிலத்துக்கான விருது
- ❖ சட்டம் ஒழுங்கில் மேம்பட்ட மாநிலத்துக்கான விருது

6) 2019 செப்டம்பர் 23, 24 ஆகிய தேதிகளில் மூன்றாவது உலக திருக்குறள் மாநாடானது புது தில்லியில் நடைபெற உள்ளது. ***இதன் கருத்துரு : "உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான திருக்குறள்".***

| மாநாடு | ஆண்டு | நடைபெற்ற இடம் |
|---|---|---|
| **முதல் மாநாடு** | 2017 | நாகர் கோவில் |
| **இரண்டாவது மாநாடு** | 2018 | இங்கிலாந்து |

7) 2018 நவம்பர் 26 முதல் 30 வரை இத்தாலியின் வெனிஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான மாநாட்டில் (International Election Observers Seminar) இந்தியாவின் சார்பாக தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரியான திரு.சத்யபிரதா சாஹூ கலந்து கொண்டார்.

8) எட்டாவது சர்வதேச இரத்தக் குழாய் நலம் சார்ந்த மாநாடானது (International Aortic Summit 2018) 2018 நவம்பர் 23 முதல் 25 வரை சென்னையில் நடைபெற்றது.

9) வேலூர் மாவட்டம் அப்துல்லாபுரத்தில் புதிய விமான நிலையம் ஒன்று 2019 ஜூன் மாதத்தில் தொடங்கப்பட உள்ளது.

## தேசம்

1) **அரசியலமைப்புச் சட்டமானது பிரெய்லி முறையில்** தயாரிக்கப்பட்டு வருகிறது. ஐந்து பாகங்களாகத் தயாரிக்கப்பட்டு வரும் இதன் முதல் பாகமானது 2018 நவம்பர் 25 அன்று வெளிவர உள்ளது.

2) உத்திரப் பிரதேச மாநில அரசானது இரண்டு நகரங்களின் பெயர்களை பெயர் மாற்றம் செய்துள்ளது. அவையாவன:

| முந்தைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| **ஃபைசாபாத்** | அயோத்யா |
| **அலகாபாத்** | பிரயாக்ராஜ் |

3) **மாநில சட்டப்பேரவைத் தேர்தல்கள் :**

| மாநிலம் | நாள் | சட்டப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| **சத்தீஸ்கர்** | 2018 நவம்பர் 12 | 90 |
| **மத்திய பிரதேசம்** | 2018 நவம்பர் 28 | 230 |
| **மிசோரம்** | 2018 நவம்பர் 28 | 40 |

4) ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் 'மத்திய பழங்குடியினருக்கான பல்கலைக்கழகம்' (Central Tribal University) ஒன்றினை அமைப்பதற்காக மத்திய கேபினட் அமைச்சரவையானது 'மத்திய பல்கலைக்கழகங்கள் சட்டம் 2009'-ல் சட்டத் திருத்தம் செய்ய முடிவெடுத்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

5) ஒடிசா மாநிலத்திலுள்ள ஜார்சகுடா விமான நிலையத்தின் (Jharsuguda Airport) பெயரை **“வீர சுரேந்திர சாய் விமான நிலையம்”** என்று மாற்றம் செய்வதற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் வழங்கியுள்ளது.

6) யமுனை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்தியாவின் முதலாவது கம்பிவடத்தினாலான சமச்சீரற்ற பாலமான ‘Signature Bridge’ஆனது டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

7) நாடு முழுவதிலும் தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு (Top) ஆகியவற்றின் விலையைக் கட்டுக்குள் வைக்கும் நோக்கத்தில் அவற்றின் இருப்பை உறுதி செய்வதற்கான **‘ஆபரேஷன் கிரீன்’ (Operation Green)** திட்டத்துக்கு மத்திய உணவு பதப்படுத்துதல் அமைச்சகமானது ஒப்புதல் வழங்கியுள்ளது.

8) இலவச வைஃபை, சி.சி.டி.வி கண்காணிப்பு, தகவல் காட்சித் திரை அமைப்பு மற்றும் பேருந்து நிறுத்தங்கள் தொடர்பான அறிவிப்புகள் ஆகிய வசதிகள் கொண்ட பொதுமக்களுக்கு உதவிகரமான **‘மோ பேருந்து’ (MO Bus)** என்னும் பேருந்து சேவையினை **ஒடிசா** மாநில அரசானது தொடங்கி வைத்துள்ளது.

9) 2019ல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் பொதுமக்களின் பங்களிப்பினை மேம்படுத்தும் பொருட்டு பொது விவாதங்களை நடத்தவும் அவற்றில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகப்படுத்தவும் ‘டுவிட்டர் இந்தியா’ நிறுவனமானது #Powerof 18 என்னும் முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.

10) குழந்தைகள் காப்பகத்தில் வளரும் குழந்தைகளுக்கான விழாவாகக் கருதப்படும் **‘ஹவுஸ்லா 2018’ (Hausla 2018)**-ஐ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது புது தில்லியில் தொடங்கி வைத்துள்ளது. கருத்துரு. : “குழந்தைகள் பாதுகாப்பு” (Child Safety)

11) இந்தியாவின் முதலாவது திறந்த வெளியிலமைந்த, கழிவுப்பொருட்களிலிருந்து வடிவமைக்கப்பட்ட அருங்காட்சியகமானது (Open - Air Waste to Art Mueseum) ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் அமைக்கப்பட்டுள்ளது.

12) “மாற்றுத் திறனாளி இளைஞர்களுக்கான உலகளாவிய தகவல் தொழில்நுட்பப் போட்டிகளை” (Global IT Challenge for Youth with Disabilities 2018) தென் ஆப்ரிக்காவுடன் சேர்ந்து இந்தியா நடத்தியது. இப்போட்டிகள் 2018 நவம்பர் 9 முதல் 11 வரை நடைபெற்றன.

13) **கோபார் தன் (GOBAR - Dhan)** திட்டத்தின் கீழ் முதலாவது உயிரி - எரிவாயு ஆலையினை கேரள மாநில அரசானது அமைத்துள்ளது. இந்த ஆலையானது நாளொன்றுக்கு 1000 கிலோ அளவுக்கு உயிரி கழிவுகளை கையாளும் திறன் கொண்டது.

14) சகோதர சகோதரிகளுக்கிடையிலான உறவினைக் கொண்டாடும் 'ரக்ஷா பந்தன்' விழாவானது ஜார்க்கண்ட் மாநிலத்தின் கோடா மாவட்டத்திலுள்ள (Godda district) கிராமம் ஒன்றில் ஸ்வச் பந்தன் (Swachh Bandhan) என்னும் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

15) பிரதமர் நரேந்திர மோடி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் போன்று நாடு முழுவதிலும் உள்ள 129 மாவட்டங்களில் **நகர எரிவாயு பகிர்மான திட்டத்துக்கான** (City Gas Distribution Project) அடிக்கல்லினை நாட்டினார்.

16) 2018 நவம்பர் 25 அன்று பிரதமர் நரேந்திர மோடி 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சியில் (Maan Ki Baat) தனது 50-வது உரையை நிகழ்த்தினார்.

17) உத்தரப் பிரதேச மாநில அரசானது லக்னோவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 'ஏகானா சர்வதேச விளையாட்டு மைதானத்துக்கு' முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் பெயரினை சூட்டத் திட்டமிட்டுள்ளது.

18) ஒடிசா மாநில அரசானது "வான்வெளி மற்றும் பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்திக் கொள்கையினை" (Aerospace and Defence Manufacturing Policy 2018) வெளியிட்டுள்ளது.

19) கல்வியாளர்களுக்கான தலைமைத்துவ திட்டம் **(Leadership for Academicians Programme - LEAP)** மற்றும் உயர் கல்வி நிலையங்களில் பணிபுரிபவர்களுக்கான வருடாந்திர புத்துயுரூட்டும் திட்டம் **(Annual Refresher Programme in Teaching - ARPIT)** ஆகிய திட்டங்களை மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகமானது புது தில்லியில் தொடங்கி வைத்துள்ளது.

20) இரயில்வே அமைச்சகமானது முன் பதிவு செய்யப்படாத இரயில் பயணச் சீட்டுகளைப் பதிவு செய்வதற்காக 'UTS on Mobile' என்னும் கைபேசிச் செயலியினை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் நடைமேடை பயணச்சீட்டு, மாதாந்திர பயணச் சீட்டு போன்றவற்றை எளிதில் பெற்றுக் கொள்ள முடியும்.

21) இமயமலையில் உள்ள மாநிலங்களில் நீடித்த வளர்ச்சியினை உறுதி செய்யும் நோக்கில் நீதி ஆயோக் அமைப்பானது, 2018 நவம்பர் 15 அன்று இமயமலைப் பகுதியிலுள்ள மாநிலங்களுக்கான பிராந்தியக் குழுவினை (Himalayan State Regional Council) உருவாக்கியுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக Dr.V.K.சரஸ்வத் நியமிக்கப்பட்டுள்ளார்.

22) ஆந்திரப் பிரதேச மாநில அரசானது ஆதார் அட்டையின் மூலம் நில ஆவணங்களை இணைய தளத்தில் சரி பார்ப்பதற்காக 'புசேவா மற்றும் புதார் இணையவாயில்களை' (Bhuseva and Bhudaar Web Portal) தொடங்கியுள்ளது. விவசாயிகளின் நில

ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக 'புதார் பாதுகாப்புக் கொள்கையினையும்' (Bhudaar Security Policy) அம்மாநில அரசானது வெளியிட்டுள்ளது.

23) கோவா மாநில அரசானது தனது மாநிலத்தில் உள்ள விவசாயிகளின் வேளாண் மகசூலைப் பெருக்குவதற்காக **'Cosmic Farming'** என்னும் புதியவகை விவசாயத்தினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது.

24) மகாராஷ்டிர மாநில அரசானது இந்தியக் கடற்படையில் நீண்ட காலம் பணியிலிருந்த 'INS விராத்' என்னும் விமானம் தாங்கிக் கப்பலை இந்தியாவின் முதலாவது **'கடலில் நங்கூரமிடப்பட்ட அருங்காட்சியகம் மற்றும் கடல்சார் சாகச மையமாக'** மாற்றியமைக்க முடிவெடுத்துள்ளது.

25) உத்திரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள ராம் நகரில் உள்ள கங்கையாற்றுப் பகுதியில் இந்தியாவின் முதலாவது **உள்நாட்டு பன்முனைய துறைமுகமானது (1st Inland Multi-Modal Terminal Port)** பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

26) **உலக கழிவறை தினத்தன்று** (2018 நவம்பர் 19) மனிதக் கழிவுகளை கைகளால் அள்ளும் அவலத்தை ஒழிக்கவும் அதனால் ஏற்படும் இறப்புகளைக் குறைக்கவும் 'சுலப் இண்டர்நேஷனல்' (Sulabh International) அமைப்பானது இந்தியாவின் முதலாவது, கழிவுகளை சுத்திகரிக்கும் எந்திரத்தை (Sewer Cleaning Machine) உருவாக்கியுள்ளது.

27) குழந்தைகளுக்கான திரைப்படத் திருவிழாவான ஜாஷ்னே பச்பன் (Jashne Bachpan) நிகழ்வின் 14வது பதிப்பானது புது தில்லியிலுள்ள லிட்டில் தியேட்டர் குரூப் (LIG), சம்முக், அபிமஞ்ச், அபிகல்ப் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

28) உத்தரப் பிரதேச மாநிலம் மதுராவிலுள்ள சுர்மாரா கிராமத்தில் இந்தியாவின் முதலாவது யானைகளுக்கான சிறப்பு மருத்துவமனையானது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

29) மகாராஷ்டிராவின் அவுரங்காபாத்தில் இரண்டாவது மாபெரும் உணவுப் பூங்காவானது ($2^{nd}$ Mega Food Park) தொடங்கப்பட்டுள்ளது.

30) இராமாயண சுற்று தடத்தின் ஒரு பகுதியாக அயோத்தியிலிருந்து இராமேஸ்வரம் வரை சென்று திரும்பக் கூடிய 'ஸ்ரீ இராமாயணா எக்ஸ்பிரஸ்' (Shri Ramayana Express) என்னும் சிறப்பு சுற்றுலா இரயிலானது புது தில்லியிலிருந்து தொடங்கி வைக்கப்பட்டது.

31) 1943 டிசம்பர் 30 அன்று போர்ட் பிளேர் சிறையில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் முதன் முறையாக மூவர்ணக் கொடியை ஏற்றியதன் 75வது ஆண்டினை நினைவு கூறும் விதமாக 75 ரூபாய் நாணயமானது வெளியிடப்படும் என்று மத்திய நிதியமைச்சகமானது அறிவித்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

32) பாகிஸ்தானில் உள்ள **'குருத்வாரா தர்பார் சாகிப்புக்கு'** இந்தியாவில் உள்ள சீக்கியப் புனிதப் பயணிகள் விசா இல்லாமல் சென்று வருவதற்காக **'கர்தார்பூர் வழித்தடத்தினை'** (Kartarpur Corridor) அமைக்கும் ஒப்பந்தத்தில் இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. பாகிஸ்தான் அமைச்சர் ஒருவர் இதனை 'அமைதிப் பேச்சு வார்த்தையின் வெற்றி' (Victory of Peace Lobbies) என்று குறிப்பிட்டுள்ளார்.

33) ஆந்திரப் பிரதேச மாநில அரசானது தனது புதிய சட்டமன்ற கட்டிடத்தை 250 மீட்டர் உயரத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இது ஒருமைப்பாட்டு சிலையை (Statue of Unity) விட அதிக உயரம் கொண்டதாக இருக்கும்.

34) உள்நாட்டு பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தியில் அறிவுசார் சொத்துரிமை கலாச்சாரத்தினை மேம்படுத்த **"ராக்ஷ கியான் சக்தி திட்டத்தினை"** (Mission Raksha Gyan Shakti) மத்திய பாதுகாப்பு அமைச்சர் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

35) இந்தியாவின் உலகளாவிய வர்த்தகத்தில் பொருள்கள் இடப்பெயர்வுக்கான செயல்பாட்டுத் திறமையினை மேம்படுத்துவதற்காக 'லாஜிக்ஸ் இந்தியா 2019' (Logix India 2019) என்னும் கண்காட்சியானது 2019 ஜனவரி 31 முதல் பிப்ரவரி 2 வரை புதுதில்லியில் நடைபெற உள்ளது.

36) BBC வெளியிட்டுள்ள 21-ம் நூற்றாண்டுக்கான 100 சிறந்த அயல்மொழி திரைப்படங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரே இந்தியத் திரைப்படம் 'பதேர் பாஞ்சாலி' (Pather Panchali) ஆகும்.

37) மேற்கு வங்க பசுமைப் பல்கலைக்கழகமானது ராணி ராஷ்மோனி பசுமைப் பல்கலைக்கழகம் (Rani Rashmoni Green University) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## சர்வதேசம்

**1)** முதல் உலகப் போர் முடிவுக்கு வந்ததன் 100-வது ஆண்டு நினைவு தினமானது 2018 நவம்பர் 11 அன்று பாரிசில் அனுசரிக்கப்பட்டது. இந்தியாவின் சார்பாக இந்நிகழ்வில் துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா நாயுடு கலந்து கொண்டார்.

**2)** **இந்த ஆண்டிற்கான வார்த்தைகள் :**

| **Dictionary.com** | **Misinformation** |
|---|---|
| **Oxford** | Toxic |

3) இந்தோனேசியாவின் மேடான் நகரத்தில் கேம்பங் மெட்ராஸ் அல்லது மெட்ராஸ் கிராமப் பகுதி **(Kampung Madras Village area)** என்னும் இடத்தில் 'Little India Gate' ஆனது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

4) அர்ஜெண்டினாவில் நடைபெற்று வரும் G20 மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தையில் இந்தியப் பிரதமர் மோடி, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ஆகியோர் பங்கேற்றனர்.

5) பாகிஸ்தானில் இஸ்லாமாபாத் மாநகரப் போக்குவரத்து துறையானது மாற்றுப் பாலினத்தவருக்கு **(Transgenders)** ஓட்டுநர் உரிமம் வழங்கத் தொடங்கியுள்ளது.

6) உலகளாவிய சூரிய ஒளி மின் உற்பத்திக் கூட்டமைப்பில் **(International Solar Alliance)** புதிய உறுப்பினராக இணைய 'போஸ்ட்வானா' முடிவு செய்துள்ளது.

7) சர்வதேச தொலைத் தொடர்பு ஒன்றியக் குழுவின் **(International Tele communications Union Council)** உறுப்பினராக இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 2019 முதல் 2022 வரையிலான அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இந்தியா உறுப்பினராகத் தொடரும்.

8) பப்புவா நியூ கினியாவின் இரண்டாவது மிகப்பெரிய மலைச் சிகரமான கிலுவா (Mt Giluwe)-ல் ஏறிய முதல் இந்திய மலையேற்ற வீரர் என்ற சாதனையை மேற்கு வங்கத்தைச் சேர்ந்த சத்யரூப் சித்தாந்தா செய்துள்ளார்.

9) பவளப் பாறைகளை அழிக்கும் நச்சுத் தன்மை வாய்ந்த **சன் ஸ்கிரீன் களிம்பு** (Sun Screen) வகைகளை முற்றிலுமாகத் தடை செய்யும் உலகின் முதலாவது நாடு என்ற பெருமையை 'பலாவு குடியரசு' (Republic of Palau) பெற்றுள்ளது.

10) மூத்த கற்பனைக் கதை எழுத்தாளரும் 'மார்வெல் காமிக்ஸ்' (Marvel Comics) நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான ஸ்டான் லீ (Stan Lee) அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் மறைந்தார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## *மாநாடுகள் & கருத்தரங்குகள்*

| மாநாடுகள்/ கருத்தரங்குகள்/ சந்திப்புகள் | நோக்கம்/கருத்துரு | இடம் | நாள் |
|---|---|---|---|
| 13வது **G20** மாநாடு, 2018 | "நியாயமான மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான ஒருமித்த கருத்தினை உருவாக்குதல்" | பியூனஸ் அயர்ஸ், அர்ஜெண்டினா | 2018 நவம்பர் 30 - டிசம்பர் 1 |
| 9வது வருடாந்திர இராணுவ மற்றும் பாதுகாப்பு மாநாடு | இந்தியா-சீனா இடையே நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தையானது கூட்டு இராணுவப் பயிற்சிகள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கம் கொண்டதாகும் | பெய்ஜிங், சீனா | 2018 நவம்பர் 18 |
| ஆறாவது இந்திய சமூகப் பணியியல் மாநாடு | "மனித வள மேம்பாடு மற்றும் சமூக உட்செறிப்பு : சமூகப் பணியியல் கல்வி மற்றும் செய்முறைக்கான தேவைகள்" | புதுதில்லி | 2108 நவம்பர் 1-3 |

| | | | |
|---|---|---|---|
| **இரண்டாவது விரிவான பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு (RCEP) மாநாடு** | ஆசியான் நாடுகளுக்கிடையிலான தொடர்பு, நீடித்த வளர்ச்சி, தீவிரவாத எதிர்ப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு ஆகியவை குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டன. | சிங்கப்பூர் | 2018 நவம்பர் 14 |
| **சகிப்புத் தன்மைக்கான சர்வதேச மாநாடு** | "பன்மைத்துவத்திலிருந்து செழித்து வளர்தல் : புத்தாக்கம் மற்றும் ஒத்துழைப்பு மூலம் வேற்றுமைகளை ஏற்றுக் கொள்ளுதல்" | துபாய், ஐக்கிய அரபு அமீரகம் | 2018 நவம்பர் 16 |
| **முதலாவது இந்திய-ரஷ்ய உத்தி சார் பொருளாதார மாநாடு** | செயற்கை நுண்ணறிவு, போக்குவரத்து மற்றும் சிறிய, மத்திய தொழில் நிறுவனங்கள் போன்ற தளங்களில் ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் | செயின்ட் பீட்டர்ஸ் பர்க், ரஷ்யா | 2018 நவம்பர் 25-26 |
| **முதலாவது உலக குளிரூட்ட புத்தாக்க மாநாடு (1st Global Cooling Innovation Summit)** | அதிகரித்து வரும் செயற்கை குளிரூட்டிகளின் தேவையினால் நிகழும் பருவ நிலை மாறுபாட்டினை எதிர் கொள்வதற்கான வழி முறைகளைக் கண்டறிதல் | புது தில்லி | 2018 நவம்பர் 12 |
| **ஏழாவது சர்வதேச சுற்றுலா மாநாடு** | "வீரதீர சுற்றுலா" | அகர்தலா, திரிபுரா | 2018 நவம்பர் 23 |
| **நான்காவது சர்வதேச வணிக வாகனங்கள் மற்றும் சக்கரங்கள் கண்காட்சி 2018** | டிரக்குகள், சிற்றுந்துகள், உயர்த்தும் வாகனங்கள், கேரேஜ்கள் போன்றவை இக்கண்காட்சியில் இடம் பெற்றன. | சென்னை | 2018 நவம்பர் 30-டிசம்பர் 2 |
| **18-வது இந்தியப் பெருங்கடல் சூழ் நாடுகள் கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு (Indian Ocean Rim Association Council of Foreign Ministers Meeting)** | "IORA - அமைதி, நிலைத்தன்மை மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றினை மேம்படுத்த ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளின் மக்களை ஒன்றிணைத்தல்" | டர்பன், தென் ஆப்ரிக்கா | 2018 நவம்பர் 2 |
| **9வது இந்திய கிர்கிஸ்தான் நாடுகளுக்கிடையிலான வணிகம், பொருளாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான அரசுகளுக்கிடையிலான மாநாடு (IK - IGC)** | இந்தியா-கிர்கிஸ்தான் நாடுகளின் வணிக நிறுவனங்களுக்கிடையிலான முயற்சிகளை முன்னெடுத்தல், வணிக மற்றும் வர்த்தகம் சார்ந்த தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல் ஆகியவை இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டன. | புது தில்லி | 2018 நவம்பர் 15-16 |

## *திட்டங்கள்*

| திட்டங்கள் | நோக்கம்/செய்திகளில் இடம் பெற்றதன் காரணம் | அமைச்சகம்/ கேபினட்/ அரசு | நாள் |
|---|---|---|---|
| **யுவ சஹாகர்** | கூட்டுறவுச் சங்கங்கள் மூலமான வர்த்தகத்தில் ஈடுபட இளைஞர்களை ஊக்குவித்தல் | மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல்வாழ்வு அமைச்சகம் | 2018 நவம்பர் 14 |
| **சௌரா ஜல்நிதி திட்டம்** | நீர்ப்பாசனத்துக்கு சூரிய ஒளி மின் உற்பத்தியை பயன்படுத்த ஊக்குவிப்பதை இத்திட்டமானது நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் இதன் கீழ் விவசாயிகளுக்கு 90% அளவுக்கு மானியமும் 5,000 சோலார் பம்புகளும் வழங்கப்படும். | ஒடிசா மாநில அரசு | 2018 நவம்பர் 2 |
| **கச்சா டாய்லெட் டோடோ அபியான்** | பாதுகாப்பற்ற கழிவறைகளை அகற்றுவதற்கான திட்டம் | மேற்கு வங்காள அரசு | |
| **சம்ருதி திட்டம்** | வேலைவாய்ப்பினை அதிகரிப்பதற்கான திட்டம் | கர்நாடகா அரசு | 2018 நவம்பர் 1 |

| | | | |
|---|---|---|---|
| **கௌ சம்ரிதி ப்ளஸ் திட்டம் (Gau Samridhi Plus Scheme)** | பால்பண்ணை சார்ந்த தொழிலாளர்களுக்கு காப்பீடு வழங்குதல் | கேரளா | |

## 2018 நவம்பர் – நடைபெற்ற இராணுவப் பயிற்சிகள்

| பயிற்சியின் பெயர் | பங்கேற்ற நாடுகள் | பயிற்சியின் வகை | இடம் | நாள் |
|---|---|---|---|---|
| **தர்மா கார்டியன் 2018** | இந்தியா & ஜப்பான் | கூட்டு இராணுவப் பயிற்சி | வெய்ரெங்டே (Vairengte), மிசோரம் | 2018 நவம்பர் 1 |
| **வஜ்ர பிரஹார்** | இந்தியா & அமெரிக்கா | கூட்டு இராணுவப் பயிற்சி | பைகானேர், இராஜஸ்தான் | 2018 நவம்பர் 19 |
| **இந்திரா 2018** | இந்தியா & ரஷ்யா | கூட்டு இராணுவப் பயிற்சி | ஜான்சி, உத்தரப் பிரதேசம் | 2018 நவம்பர் 18 |
| **சமுத்திர சக்தி** | இந்தியா & இந்தோனேசியா | இருதரப்பு கடற்பயிற்சி | போர்ட் ஆஃப் சுரபயா, இந்தோனேசியா | 2018 நவம்பர் 12 |
| **சிம்பெக்ஸ் 2018** | இந்தியா & சிங்கப்பூர் | கூட்டு கடற்பயிற்சி | அந்தமான் கடல், வங்காள விரிகுடா | 2018 நவம்பர் 10-21 |

## பாதுகாப்பு & விண்வெளி

1) 3,423 கிலோ கலச்சுமை கொண்ட GSLV MK III - D2 என்னும் இராக்கெட் மூலம் **GSAT - 29** தகவல் தொடர்பு செயற்கைக் கோளானது 2018 நவம்பர் 14 அன்று விண்ணில் செலுத்தப்பட்டது. இது ஒரு பல பட்டை மற்றும் பல கற்றை (Multi band and Multi-beam) செயற்கைக்கோள் ஆகும்.

2) 2018 நவம்பர் 29 அன்று **ஹைசிஸ் செயற்கைக் கோளானது** (HYSIS - Hyper Spectral Imaging Satellite) PSLV C-43 இராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது. இது இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தால் (ISRO) செலுத்தப்படும் 45-வது PSLV செயற்கைக் கோளாகும்.

3) கெப்ளர் வான் தொலைநோக்கியின் (Kepler Space Telescope) செயல்பாட்டுக்குத் தேவையான எரிபொருள் முடிவுற்றதால் நாசா விண்வெளி மையமானது அதற்கு ஓய்வளித்துள்ளது. இந்த கெப்ளர் வான் தொலைநோக்கியானது வெளிக்கோள்களை (exoplanet) கண்டறிய **'பெயர்வு ஒளி அளவியல் கண்டறிதல்'** (transit photometry detection) முறையைப் பின்பற்றுகிறது.

4) மொராக்கோ நாடானது 'முகம்மது VI-B' என்ற தனது இரண்டாவது புவி கூர்நோக்கு செயற்கைக் கோளினை (Mohammed VI-B Earth Observation Satellite) ஏரியன் ஸ்பேஸ் வேகா இராக்கெட் மூலம் கயானா விண்வெளி ஏவு தளத்திலிருந்து

விண்ணில் செலுத்தியது. இந்த ஏவுதளமானது தென் அமெரிக்காவிலுள்ள பிரெஞ்சு கயானாவின் கௌரோவில் (Kourou) உள்ளது.

5) சென்னையின் L & T காட்டுப் பள்ளி கப்பல் கட்டும் தளத்திலிருந்து இந்தியக் கடலோரக் காவல் படைக்குச் சொந்தமான **ICGS வராஹா** என்னும் கடலோர ரோந்துக் கப்பலானது (offshore Patrol Vessel) செயல்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

6) **மறைந்திருந்து தாக்கும் கிரிவக் III வகுப்பு போர்க்கப்பல்களை** (Krivak III - Class Stealth Frigates) ரஷ்யாவிடமிருந்து வாங்குவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.

7) இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமானது (ISRO) **டெல்லி மற்றும் திருவனந்தபுரம்** உள்ளிட்ட இடங்களில் **'விண்வெளி அருங்காட்சியகத்தையும்'** (Space Mueseum) கேரளாவிலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்துக்கு அருகில் **'விண்வெளி தொழில்நுட்பப் பூங்கா' (Space Tech Park)** ஒன்றினையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

8) ஜெட் சுழலிகள் மற்றும் நகரும் எரிபொருள் உந்திகள் எதுவும் இல்லாத உலகின் முதலாவது ஒலி எழுப்பாத விமானத்தினை (Silent Airplane) அமெரிக்காவின் மசாச்சுசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியில் (Massachusetts Institute of Technology) உள்ள பொறியாளர்கள் வடிவமைத்துள்ளனர்.

9) நாசாவின் செவ்வாய் கிரகத்துக்கான திட்டமான இன்சைட் திட்டமானது (Insight Mission) 2018 நவம்பர் 27 அன்று செவ்வாய் கோளில் தரையிறங்கியது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

1) ஆறுகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் மழைப் பொழிவினால் ஏற்படும் மாற்றத்தைக் கண்காணிக்க இந்திய வானிலை ஆய்வு மையமானது **'விளைவுகளின் அடிப்படையிலான முன்னறிவிப்பு அணுகுமுறை'** (Impact Based Forecasting Approach) என்னும் தொழில்நுட்பத்தைக் கண்டறிந்துள்ளது.

2) இங்கிலாந்தின் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் உலகிலேயே மிகப்பெரிய மீத்திறன் கணினியான **'SpiNNaker Machine'** (Spiking Neural Network Architecture Machine) ஆனது வடிவமைக்கப்பட்டுள்ளது.

3) மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகமானது **AirSewa 2.0** என்னும் இணைய வாயில் மற்றும் கைபேசிச் செயலியினை புதுதில்லியில் அறிமுகப்படுத்தியுள்ளது.

4) மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவனமானது (IIT Madras) **'சக்தி'** என்னும் இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நுண் செயலியினை (Micro processor) வடிவமைத்துள்ளது.

5) **PAiSA இணையவாயில் :** இது தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா - தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் (DAY-NULM) கீழ் எளிதாகக் கடன் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட மைய நிலைப்படுத்தப்பட்ட இணைய வாயிலாகும்.

6) வரி செலுத்துபவர்கள் எளிய முறையில் GST கணக்கீடுகளுக்கு தீர்வு காணும் வகையில் CASIO நிறுவனமானது உலகின் முதலாவது சரக்கு மற்றும் சேவை வரி கணக்கிடும் கருவியை (GST Calculator) வடிவமைத்துள்ளது.

7) இரயில்களின் நேரம் தவறாமையைக் கண்காணிப்பதற்காக **'eDrishti'** என்னும் மென்பொருளை இந்திய இரயில்வேயானது அறிமுகப்படுத்தியுள்ளது.

8) சீனாவின் வுசென் நகரில் நடைபெற்ற ஐந்தாவது உலக இணைய மாநாட்டில் (5th World Internet Conference, Wuzhen) சீனாவின் செய்தி முகமையான சின்ஹுவா (Xinhua), **உலகின் முதலாவது செயற்கை நுண்ணறிவு ஊட்டப்பட்ட செய்தி வாசிப்பாளரை** (world's 1st Artificial Intelligene News Anchor) அறிமுகப்படுத்தியுள்ளது.

9) இந்தியாவின் முதலாவது குழந்தைகளுக்கான மேம்படுத்தப்பட்ட ரோபோவான **'Miko 2'**-ஆனது மும்பையிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தால் (IIT - Bombay) வடிவமைக்கப்பட்டுள்ளது.

## *சூறாவளிகள்*

| சூறாவளிகள் | பாதிக்கப்பட்ட பகுதிகள் | நாள் | பெயரிட்ட நாடு |
|---|---|---|---|
| **கஜா புயல்** | நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர் | 2018 நவம்பர் 16 | இலங்கை |

## *பொருளாதாரம்*

1) உலக வங்கி வெளியிட்டுள்ள **'தொழில் தொடங்க ஏதுவான நாடுகளின் பட்டியலில்'** (Ease of Doing Business Index) இடம் பெற்றுள்ள 190 நாடுகளில் இந்தியா **77-வது** இடத்தினைப் பெற்றுள்ளது. நியூசிலாந்து இப்பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ளது.

2) செஷல்ஸ் குடியரசானது (Republic of Seychelles) உலகிலேயே முதன் முறையாக **'சவரின் நீல நிற கடன் பத்திரங்களை'** (Sovereign Blue Bond)

அறிமுகப்படுத்தியுள்ளது. இது நீடித்த கடல்சார் மீன்பிடி தொழிலுக்கு உதவும் ஒருவகையான நிதி திரட்டும் முறைமையாகும்.

3) சுவிட்சர்லாந்து நாட்டின் IMD Business School வெளியிட்டுள்ள **திறனுக்கான சர்வதேச தர வரிசையில் (World Talent Ranking 2018)** இந்தியா 53வது இடத்தில் உள்ளது. சுவிட்சர்லாந்து முதலாவது இடத்திலுள்ளது.

4) யுனெஸ்கோவின் **'உலக கல்வி கண்காணிப்பு அறிக்கையின்படி'** (UNESCO's Global Education Monitoring Report 2019) இந்தியாவில் புலம் பெயர்ந்த குடும்பங்களில் உள்ள குழந்தைகளில் 40 விழுக்காட்டினர் பள்ளி செல்லும் வாய்ப்பற்று சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்.

5) மத்திய ரிசர்வ் வங்கியானது வங்கி சாரா நிதி நிறுவனங்களின் கடன் பத்திரங்களுக்கு (NBFC bonds) 'பகுதியளவு கடன் அளித்தல்' (Partial Credit Enhancement) முறையை நடைமுறைப்படுத்த வங்கிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

6) வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாவர்கள் போன்ற கடனாளர்கள் மற்றும் பண விவகாரங்களில் சட்டச் சிக்கல்களில் உள்ளோர் ஆகியோரின் தகவல்களைத் திரட்டி சேமித்து வைப்பதற்காக ரிசர்வ் வங்கியானது **'பொதுக் கடன் பதிவகம்' (Public credit Registry)** என்னும் விரிவான டிஜிட்டல் முறையிலான அமைப்பினை உருவாக்கியுள்ளது.

7) IndusInd வங்கியானது **'IndusInd Bank Nexxt'** என்னும் இந்தியாவின் முதலாவது பொத்தான்களுடன் கூடிய ஊடாடும் பற்று அட்டையை (interactive credit card) அறிமுகப்படுத்தியுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## விருதுகள்

| விருதுகள்/பரிசுகள் | ஆளுமை/நிறுவனம் |
|---|---|
| **இறந்தபின் உடலுறுப்பு தானம் செய்பவர்களில் சிறப்பாக செயல்படும் மாநிலத்துக்கான விருதின் 9-வது பதிப்பு. (9th Cadaveric Organ Donation Award)** | தமிழ்நாடு (தொடர்ந்து நான்காவது முறையாக இவ்விருதினைப் பெறுகிறது) |
| **தன் ஸ்ரீ சோம புத்தக விருது (Tan Sri Soma Book Award)** | **Book :** 1801 - M. இராஜேந்திரன் |
| **கிளெய்ட்ஸ்மான் விருது 2018 (Gleitsman Award 2018)** | மலாலா யூசுஃப்சாய் |
| **இராஜாராம் மோகன் ராய் விருது** | N.ராம் |
| **ஏர்சேவா சாம்பியன் விருது** | சென்னை விமான நிலையம் |
| **அமைதிக்கான இந்திரா காந்தி விருது** 2018 | அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் நிறுவனம் [Centre for Science and Enviroment (CSE)] |
| **அமைதிக்கான இந்திரா காந்தி விருது** 2017 | மன்மோகன் சிங் |

<table>
<tr><td>2018 யுனெஸ்கோ கலாச்சாரம் மற்றும் புராதான பாதுகாப்புக்கான ஆசிய பசிபிக் பிராந்திய விருது</td><td colspan="2">லடாக் கலை மற்றும் ஊடக நிறுவனம் (Ladakh Arts and Media Organisation)</td></tr>
<tr><td rowspan="6">49வது IFFI<br>திரைப்பட விருதுகள் - கோவா</td><td>விருதின் வகை</td><td>விருது பெறுபவர்</td></tr>
<tr><td>IFFI தங்க மயில் விருது</td><td>Donbass - உக்ரைன் நாட்டு திரைப்படம்</td></tr>
<tr><td>சிறந்த நடிகர்</td><td>செம்பன் வினோத்</td></tr>
<tr><td>சிறந்த நடிகை</td><td>அனஸ்டாசியா புஸ்டோவிட் (Anastasiia Pustovit)</td></tr>
<tr><td>சிறப்பு விருது<br>(Special Jury Award)</td><td>1) மில்கோ லசரோவ்<br>2) To Let - தமிழ் திரைப்படம்<br>3) வால்கனோ</td></tr>
<tr><td>சிறந்த இயக்குநர்</td><td>லிஜோ ஜோஸ் பெல்லிசெரி</td></tr>
<tr><td>செவாலியர் விருது<br>(Chevalier de la Legion d' Honneur)</td><td colspan="2">அசிம் பிரேம்ஜி</td></tr>
<tr><td>எழுத்தச்சன் புரஸ்கரம் 2018 (கேரள அரசின் மிக உயரிய இலக்கிய விருது)</td><td colspan="2">M.முகுந்தன்</td></tr>
<tr><td>பத்திரிக்கை சுதந்திரத்துக்காக துணிச்சலுடன் செயல்பட்டவர்களுக்கான லண்டன் விருது 2018<br>(London Press Freedom Award for Courage 2018)</td><td colspan="2">ஸ்வாதி சதுர்வேதி</td></tr>
<tr><td>முனின் பர்கோடோகி இலக்கிய விருது 2018<br>(Munin Barkotoki Literary Award 2018)</td><td colspan="2">தேபபூஷண் போரா</td></tr>
</table>

## *நியமனங்கள் & செய்திகளில் இடம்பெற்ற நபர்கள்*

1) குவைத்தில் நடைபெற்ற 51வது பொறியாளர்கள் தின விழாவில் இந்தியாவின் Dr.மயில்சாமி அண்ணாதுரை அவர்களுக்கு **'செவ்வாய் மனிதர்'** (Mars Man) என்ற பட்டமானது வழங்கப்பட்டது.

2) இந்தியக் கல்வெட்டியல் ஆராய்ச்சியாளரும் திராவிட மற்றும் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பங்களுக்கு இடையிலான உறவு பற்றி ஆய்வுகள் மேற்கொண்ட மொழியியலாளருமான 'ஐராவதம் மகாதேவன்' அவர்கள் 2018 நவம்பர் 26 அன்று இயற்கை எய்தினார். இவர் 1966-ம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

3) அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 316ன் படி மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) புதிய தலைவராக **'அரவிந்த் சக்சேனா'** நியமிக்கப்பட்டுள்ளார்.

4) 2018 டிசம்பர் 2 அன்று இந்தியாவின் 24-வது தலைமைத் தேர்தல் ஆணையராக **சுனில் அரோரா** நியமிக்கப்பட்டுள்ளார்.

5) ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியத்தின் (UNICEF India) முதலாவது இளம் வயது கொண்ட நல்லெண்ணத் தூதுவராக **'ஹிமா தாஸ்'** (Hima Das) நியமிக்கப்பட்டுள்ளார்.

6) பெண்கள் உலக சாம்பியன்ஷிப் போட்டிகளின் (Women's World Championship) நல்லெண்ணத் தூதுவராக இந்திய குத்துச்சண்டை வீராங்கனையான **மேரி கோம்** நியமிக்கப்பட்டுள்ளார்.

7) மக்களவையின் புதிய பொதுச் செயலராக (Secretary General) **ஸ்னேகலதா ஸ்ரீவஸ்தவா** நியமிக்கப்பட்டுள்ளார்.

8) வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள குழந்தைகளின் உரிமைகளுக்காகப் போராடுவதற்காக யுனிசெஃப் அமைப்பானது (UNICEF) அசாமைச் சேர்ந்த 17 வயதே நிரம்பிய பாடகரான நஹித் அஃப்ரின் (Nahid Afrin) என்பவரை முதலாவது இளைய நல்லெண்ணத் தூதுவராக (Youth Advocate) நியமித்துள்ளது.

9) போட்டி ஒழுங்குமுறை ஆணையத்தின் (Competition Commission of India) தலைவராக 'அசோக் குமார் குப்தா' நியமிக்கப்பட்டுள்ளார்.

10) இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையத்தின் தலைவராக 'ஜலஜ் ஸ்ரீவஸ்தவா' (Jalaji Srivastava) நியமிக்கப்பட்டுள்ளார்.

11) தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (National Skill Develoment Corporation) தலைவராக 'அணில் மணிபாய் நாயக்' நியமிக்கப்பட்டுள்ளார்.

12) அணு சக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் (Atomic Energy Regulatory Board) தலைவராக நாகேஸ்வர ராவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

13) தென் கொரியாவைச் சேர்ந்த **கிம் ஜாங் யாங்** (Kim Jong Yang) சர்வதேச காவல்துறைக் குழுவின் (Interpol) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## *புத்தகங்கள் & ஆசிரியர்கள்*

| புத்தகங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| **DIDI - The untold MAMATA BANERJEE** | ஷுதபா பால் |
| **Early Tamil Epigraphy from the Earliest Times to the Sixth Century A.D.** | ஐராவதம் மகாதேவன் |
| **The Indus Script : Texts, Concordance and Tables** | ஐராவதம் மகாதேவன் |
| **Making of New India : Transformation under Modi Government** | அருண் ஜெட்லி |
| **Radio Kashmir - In Times of Peace & War** | Dr.ராஜேஷ் பட் |
| **Women in Indian Cinema** | பிரகாஷ் மக்டம் மற்றும் பினாயக் பட்டாச்சார்யா |

| | |
|---|---|
| **A Stranger Truth** | அசோக் அலெக்சாந்தர் |
| **The Betrayer of Telangana** | ராஜீவ் கௌடா |
| **The Last Girl : My Story of captivity and My Fight Against Islamic state** | நாடியா முராத் (அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்) |
| **The Rohingya in South Asia : People without a state** | சப்யாசாஷி பாசு ரேய் (Sabyasachi Basu Ray) & ரண பீர் சமதார் (Ranabir Samaddar) |
| **At Home with Muhammad Ali : A Memoir of Love, Loss and Forgiveness** | ஹனா அலி |
| **The paradoxical Prime Minister : Narendra Modi and his India** | சசி தரூர் |
| **Patel : Political Ideas and Policies** | சக்தி சின்ஹா & ஹிமான் ஷூராய் |
| **Making Sense of Pakistan** | ஃபர்சானா ஷேக் (Farzana Shaikh) |
| **Gandhi : The years that changed the world 1914 - 1948** | ராமச்சந்திர குஹா |
| **Fantastic Beasts : The Crimes of Grindelwald : The Original Screenplay** | J.K.ரௌலிங்க் |
| **The Fire Burns Blue : A History of Women's Cricket in India** | காருண்யா கேசவ் (Karunya Keshav) |
| **Notes of a Dream : The Authorized Biography of A.R.Rahman** | கிருஷ்ணா திரிலோக் |
| **A Great Association - Glimpses into the Life of Swami Bhoomananda Tirtha** | நிர்விசேஷானந்த தீர்த்தா |

## விழாக்கள்

1) ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சாங்காய் திருவிழாவானது (Sangai Festival) 2018 நவம்பர் 21 அன்று மணிப்பூரில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவானது மணிப்பூர் மாநிலத்தை உலக அளவில் தலைசிறந்த சுற்றுலா மையமாக உருவாக்கும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது.

2) 49-வது சர்வதேச திரைப்பட விழாவனாது (49th International Film Festival) கோவா தலைநகர் பனாஜியில் தொடங்கியது. கருத்துரு : வரலாறு, வீரதீரம், காதல் மற்றும் விளையாட்டுகள் போன்ற பல்வேறு தளங்களில் திரைப்படங்களை எடுப்பதன் மூலம் புதிய இந்தியாவை உருவாக்குதல். சிறப்பு கவனம் பெறும் மாநிலம் : **ஜார்க்கண்ட்,** சிறப்பு கவனம் பெறும் நாடு : **இஸ்ரேல்**

3) சர்வதேச கீதைத் திருவிழாவானது (International Gita Festival) டிசம்பர் 7 முதல் 23 வரை குருக்ஷேத்திரத்தில் கொண்டாடப்பட உள்ளது.

4) ஒடிசாவின் கோனார்க்கிலுள்ள சந்திரபாகா கடற்கரையில் சர்வதேச மணற் சிற்பத் திருவிழாவானது (International Sand Art Festival) நடைபெற்றது.

5) இரண்டாவது இந்திய சர்வதேச செர்ரி மலர் திருவிழாவானது (Indian International Cherry Blossom Festival 2018) நவம்பர் 14 முதல் 17 வரை ஷில்லாங்கில் நடைபெற்றது. இது இலையுதிர் காலத்தில் நடைபெறும் உலகின் ஒரே ஒரு செர்ரி மலர்த் திருவிழாவாகும்.

6) மத்திய பழங்குடியினர் நல அமைச்சகம் மற்றும் TRIFED ஆகியவை இணைந்து **'ஆதி மஹோத்சவ்'** என்னும் விழாவினை 2018 நவம்பர் 16 முதல் 30 வரை புது தில்லியில் வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டின.

7) பலியத்ரா விழாவானது (Baliyatra Festival) ஒடிசாவில் தொடங்கி வைக்கப்பட்டது.

8) ஜங்கல்மஹால் விழாவானது (Jangalmahal Festival) மேற்கு வங்காளத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

## *விளையாட்டு*

1) உக்ரைன் வீராங்கனையான ஹன்னா ஒகோட்டாவை (Hanna Okhota) வென்று **ஆறாவது முறையாக உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை** (6th World Championship Title) **மேரி கோம்** வென்றார்.

2) சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் ஹால் ஆஃப் ஃபேம் (ICC Hall of Fame) பட்டியலில் இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரான ராகுல் டிராவிட் இடம் பெற்றுள்ளார்.

3) சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலானது 'ICC பெண்கள் T20 சாம்பியன்ஷிப்' போட்டிகளின் (ICC Women's World T20 Championship) பெயரை **'T20 உலகக் கோப்பை'** (T20 World Cup) என்று பெயர் மாற்றம் செய்துள்ளது.

4) உலக ஜூனியர் ஆடவர் ஒற்றையர் பேட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் வெண்கலப் பதக்கம் வென்றார்.

**5)** 14வது உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டிகள் ஒடிசாவின் புவனேஷ்வரில் 2018 நவம்பர் 28 முதல் டிசம்பர் 16 வரை நடைபெற உள்ளன. இதன் சின்னம் : **ஒல்லி (Olly)**

6) மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற நான்காவது ஐ.சி.சி பெண்கள் T20 உலகக்கோப்பைத் தொடரின் ($4^{th}$ ICC Women's World T20) இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலிய அணியானது சாம்பியன் பட்டம் வென்றது.

7) ஐ.சி.சி பெண்கள் T20 உலகக் கோப்பைத் தொடரில் பங்கேற்க இருக்கும் இந்தியப் பெண்கள் கிரிக்கெட் அணியின் அணித் தலைவராக **'ஹர்மன் பிரீத் கவுர்'** நியமிக்கப்பட்டுள்ளார்.

8) 23வது உலக கார்ப்பரேட் விளையாட்டுப் போட்டிகள் (World Corporate Games) கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவில் (Doha, Qatar) 2019-ம் ஆண்டில் நடைபெற உள்ளன.

## *முக்கிய தினங்கள்*

| தினம் (Days) | நிகழ்வுகள் (Events) | கருத்துரு/முக்கியத்துவம் (Themes / Significance) |
|---|---|---|
| நவம்பர் 1 | உலக சைவ தினம் (World Vegan Day) | சைவத்திற்கு மாறுவதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். |
| | 33வது இராணுவ வான் பயண தினம் (33rd Army Aviation Day) | இந்த நாளை நினைவு கூறும் வகையில் புது தில்லியின் இந்தியா கேட்டில் உள்ள அமர் ஜவான் ஜோதியில் மலர் வளையம் வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. |
| | மாநிலங்கள் உருவான தினம் | மாநில சீரமைப்புச் சட்டம், 1956-ன் படி கேரளா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், ஹரியானா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய ஐந்து மாநிலங்கள் நவம்பர் 1 அன்று உருவாக்கப்பட்டன. |
| நவம்பர் 2 | பத்திரிக்கையாளர்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களுக்கு எதிரான சர்வதேச தினம் | |
| நவம்பர் 5 | உலக சுனாமி விழிப்புணர்வு தினம் | இது சென்டாய் உடன்படிக்கையின் இலக்கு 'C'-ன் படி பேரிடர் ஏற்படும் வாய்ப்புகளைக் குறைக்க முயலுகிறது. மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நிகராக பேரிடரால் ஏற்படும் பொருளாதார இழப்புகளைக் கணக்கெடுத்து அதைக் குறைக்க முயலுகிறது. |
| நவம்பர் 7 | தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு தினம் | இந்தத் தினமானது புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியவும் அதனைக் குணப்படுத்தவும் தேவையான விழிப்புணர்வை அளிக்கிறது. |
| நவம்பர் 9 | தேசிய சட்ட ஆலோசனை தினம் | இந்தத் தினமானது அனைத்துக் குடிமக்களுக்கும் நியாயமான நீதி வழங்கும் முறை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முயலுகிறது. |
| நவம்பர் 11 | தேசிய கல்வி தினம் | இந்தத் தினமானது மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின் பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக கொண்டாடப்படுகிறது. |
| நவம்பர் 12 | பொது தகவல் தொடர்பு சேவை தினம் | மகாத்மா காந்தி முதலாவது மற்றும் இறுதி முறையாக அனைத்திந்திய வானொலி நிலையத்துக்கு வருகை தந்ததை நினைவு கூறும் விதமாக இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது. |
| | உலக நிமோனியா தினம் | "நிமோனியாவைத் தடுப்போம் : குழந்தைகள் ஆரோக்கியத்தில் முதலீடு செய்வோம்" (Stop Pneumonia : Invest in Child health) |
| நவம்பர் 14 | உலக நீரிழிவு நோய் தினம் | "குடும்பமும் நீரிழிவு நோயும்" (The Family and Diabetes) |
| நவம்பர் 16 | தேசிய பத்திரிக்கைகள் தினம் | "இந்திய ஊடகத் துறையின் வளர்ச்சியை ஆராய்தல்" |
| | உலக சகிப்புத் தன்மை தினம் | "பன்மைத்துவத்திலிருந்து செழிப்பாக வளர்தல் : புத்தாக்கம் மற்றும் கூட்டிணைவு மூலம் பன்முகத் தன்மையை |

| | | |
|---|---|---|
| | | அடைதல்” |
| **நவம்பர் 18** | இயற்கை மருத்துவ தினம் (Naturopathy Day) | மருந்துகளின் தேவையின்றி உணவு, வாழ்க்கைமுறை ஆகியவற்றில் மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலம் நோய்களைத் தடுத்தலே இம்மருத்துவ முறையின் நோக்கமாகும். |
| | 238வது பொறியாளர் பாதுகாப்புப் படை தினம் (238th Corps of Engineers Day) | பொறியாளர் பாதுகாப்புப் படையானது இராணுவத்தில் போர் சார்ந்த உதவிகள், முப்படைகளுக்குமான உள்கட்டமைப்பை உருவாக்குதல், இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் தகவல் தொடர்பினை உருவாக்குதல், பேரிடர் கால மீட்புப் பணிகள் போன்றவற்றில் ஈடுபடுகிறது. |
| **நவம்பர் 19** | உலக கழிப்பறை தினம் | “When Nature Calls” |
| **நவம்பர் 21** | உலக தொலைக்காட்சி தினம் | |
| **நவம்பர் 23** | உவமைக் கவிஞர் சுரதாவின் 98வது பிறந்த தினம் | |
| | குருநானக் ஜெயந்தி | குருநானக் அவர்களின் 549வது பிறந்த தினம் |
| **நவம்பர் 25** | சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் ஒழிப்பு தினம் | “Orange the World : # HearMeToo” |
| **நவம்பர் 26** | தேசிய பால் தினம் | ‘இந்தியாவின் பால் மனிதர்’ என்று அழைக்கப்படும் வர்கீஸ் குரியனின் 97வது பிறந்த தினம் |
| | அரசியலமைப்புச் சட்ட தினம் (சம்விதான் திவாஸ்) | இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் 69வது ஆண்டு தினம் |
| **நவம்பர் 27** | இந்திய உடலுறுப்பு தான தினம் (Indian Organ Donation Day) | இந்த தினத்தன்று தமிழ்நாட்டுக்கு 9வது உடலுறுப்பு தானத்துக்கான விருதானது வழங்கப்பட்டது. |

- மத்திய ஆயுஷ் அமைச்சகமானது (Ayurveda, Yoga and Naturopathy, Unani, Siddha and Homeopathy - Ayush Ministry) 2018 நவம்பர் 18 அன்று முதலாவது இயற்கை மருத்துவ தினமானது (Naturopathy Day) அனுசரிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது 2018 நவம்பர் 19 முதல் 25 வரையிலான வாரத்தை தேசிய ஒருமைப்பாட்டு வாரமாக (Qaumi Ekta Week) அறிவித்துள்ளது. இந்த வாரம் முழுவதும் அனுசரிக்கப்பட்ட நிகழ்வுகள் பின்வருமாறு :

| தினம் (Days) | நிகழ்வுகள் (Events) | கருத்துரு/முக்கியத்துவம் (Themes /Significance) |
|---|---|---|
| **நவம்பர் 19** | தேசிய ஒருமைப்பாட்டு தினம் | மதச்சார்பின்மை, வகுப்புவாத எதிர்ப்பு மற்றும் அகிம்சை போன்ற கருத்துக்களை கூட்டங்கள், கருத்தரங்குகள் மூலம் முன்னெடுத்துச் செல்லுதல் |
| **நவம்பர் 20** | சிறுபான்மையினர் நல்வாழ்வு தினம் | இந்தத் தினத்தில் 15 அம்ச திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. வன்முறை நிகழ வாய்ப்புள்ள பகுதிகளில் அமைதி ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. |
| **நவம்பர் 21** | மொழி ஒற்றுமை தினம் (Linguistic Harmony Day) | இந்தியா முழுவதிலும் உள்ள பல பகுதிகளில் மொழியின் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக சிறப்பு இலக்கிய |

| | | |
|---|---|---|
| | | மன்றங்கள் மற்றும் கவி சம்மேளனங்கள் நடத்தப்பட்டன. |
| **நவம்பர் 22** | நலிவடைந்த பிரிவினருக்கான தினம் (Weaker Sections Day) | நிலமற்றோருக்கு நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் வகையில் இயற்றப்பட்டுள்ள பட்டியலினத்தவர்/ பழங்குடியினருக்கான அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில் கூட்டங்கள் & கருத்தரங்குகளை நடத்துதல் |
| **நவம்பர் 23** | கலாச்சார ஒருமைப்பாட்டு தினம் | வேற்றுமையில் ஒற்றுமை என்னும் இந்தியப் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் கலாச்சார விழாக்களை நடத்துதல் மற்றும் கலாச்சார பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல் |
| **நவம்பர் 24** | மகளிர் தினம் (Women's Day) | இந்திய சமூக அமைப்பில் பெண்களின் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் முன்னேற்றத்தில் அவர்களின் பங்களிப்பு போன்றவற்றுக்கு மதிப்பளித்தல். |
| **நவம்பர் 25** | பாதுகாப்பு தினம் (Conservation Day) | சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை பல்வேறு கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மூலம் ஏற்படுத்துதல் |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS